opfer
beratung
zürich

Gewaltopfer, Strassenverkehrsopfer
Männer, Frauen, Jugendliche, Kinder

Opferberatung Zürich
Gartenhofstrasse 17 8004 Zürich
Tel 044 299 40 50 Fax 044 299 40 51
www.ohzh.ch
opferberatung@ohzh.ch

**நாங்கள் உங்களை முன்னிலைப்படுத்துகிறோம்**

ஒரு குறிப்பிடத்தகுந்த நிகழ்வு உங்கள் வாழ்க்கையில் நடந்துள்ளது. அந்நிகழ்வை தனியொருவராக உங்களால் கையாள முடியாது மற்றும் கையாள வேண்டாம். நீங்கள் ஒரு குற்றத்தினால் பாதிக்கப்பட்டவராக உள்ளீர்கள். நீங்கள் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கலாம் மற்றும் காயப்படுத்தப்பட்டிருக்கலாம், ஒரு குடும்ப உறுப்பினரால் உடல்ரீதியாக துன்புறுத்தப்பட்டிருக்கலாம் அல்லது ஒரு சாலை விபத்தின் போது காயமடைந்திருக்கலாம் - இது போன்ற பல விதமான நிகழ்வுகள் ஏற்படுகின்றன. நீங்கள் துயரமாக, கோபமாக, பயமாக, நிச்சயத்தன்மையின்றி உணர்கிறீர்கள் - மற்றும் இந்த கடினமான நேரத்தை நீங்கள் கடந்து செல்ல உங்களுக்கு உதவுவதற்கான தொழில்முறையிலான ஆதரவுக்காக நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

இந்த ஆதரவை நாங்கள் உங்களுக்கு அளித்திடுவோம்.

**எங்களிடமிருந்து ஆதரவு பெறுவதற்கு யாருக்கு தகுதியுள்ளது**

பாலினம், வயது, பிறப்பிடம் மற்றும் மதம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாது *Opferberatung Zürich* மக்களுக்கு கலந்தாய்வு சேவைகள் மற்றும் ஆதரவுகளை வழங்குகின்றது. பாதிக்கப்பட்டவர்களுக்கான சுவிஸ் உதவிச் சட்டத்தின் (*Opferhilfegesetz*) வரைமுறைகளின் கீழ் பாதிக்கப்பட்டுள்ள மக்கள். நாங்கள் ஆதரவு வழங்கும் வழக்கமான சூழ்நிலைகளின் சில உதாரணங்கள் மட்டுமெ இங்கு கொடுக்கப்பட்டுள்ளன (ஐயப்பட வேண்டாம், மற்ற பலவிதமான நிகழ்வுகளும் உள்ளன):

நீங்கள் …

… ஒரு இளைஞர் குழுவால் மூர்ச்சையாகும் வகையில் தாக்கப்பட்டுள்ளீர்கள்.

… உங்கள் மகனால் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்படும் பெற்றோர்கள்.

… ஒரு வன்முறையான தந்தையின் மகள் அல்லது மகன்.

… உங்கள் துணைவரால் தாக்கப்பட்டு வரும் ஒரு ஆண்.

... உங்களுடைய பயிற்சியாளரால் உங்களுடைய விளையாட்டுச் சங்கத்தில் பாலியல்ரீதியான துன்புறுத்தல்களை அனுபவித்துள்ள ஒரு இளம் நபர்.

... ஒரு சாலை விபத்தில் சிக்கி காயமடைந்துள்ளீர்கள்

நேரடியாக பாதிக்கப்பட்டு வரும் மக்களை மட்டும் நாங்கள் வரவேற்கவில்லை, பாதிக்கப்பட்டவர்களுக்கு மிக நெருக்கமாக உள்ள குடும்ப உறுப்பினர்கள் அல்லது மக்களையும் கூட வரவேற்கிறோம். நாங்கள் உங்கள் குறைகளைக் கேட்டு, உங்களுடைய உரிமைகள் மற்றும் விருப்பத் தேர்வுகள் குறித்து உங்களுக்கு விளக்குவதோடு நீங்கள் மேற்கொண்டு தொடருவதற்கான வழியையும் காட்டுகிறோம்.

opfer beratung zürich

Gewaltopfer, Strassenverkehrsopfer
Männer, Frauen, Jugendliche, Kinder

Opferberatung Zürich
Gartenhofstrasse 17 8004 Zürich
Tel 044 299 40 50 Fax 044 299 40 51
www.ohzh.ch
opferberatung@ohzh.ch

**எங்களுடன் தொடர்பில் இருந்தால் போதும்**

எங்களுடைய கலந்தாய்வுச் சேவைகள் கட்டணமில்லாதது மற்றும் கடுமையான இரகசியத்தன்மை வாய்ந்தது. இன்றே எங்களை 044 299 40 50 என்ற எண்ணில் அழையுங்கள் அல்லது opferberatung@obzh.ch என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுங்கள்.

நீங்கள் எங்களை முதன்முதலாக தொலைபேசியில் அல்லது மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளும் போது, எங்களால் ஜெர்மன் மொழியில் மட்டுமே தொடர்புகொள்ள முடியும். **உங்களுக்கு ஜெர்மன் பேசத் தெரியாது மற்றும் உங்களுக்காக உரைபெயர்த்துக் கூறிட ஒருவரை உங்களுடன் அழைத்துவர இயலாது எனில், ஒரு உரைபெயர்ப்பாளரை உங்களுக்காக மகிழ்ச்சியுடன் ஏற்பாடு செய்து தருவோம்.**

**எங்களிடமிருந்து ஆதரவு பெறுவதற்கு யாருக்கு தகுதியில்லை**

நீங்கள் ஒரு பெண்ணாக இருந்து, உங்களுடைய துணைவராலோ அல்லது முன்னாள்-துணைவராலோ உடல்ரீதியாக துன்புறுத்தப்படுகிறீர்கள் எனில், அல்லது ஒரு ஆண் உங்களிடம் பாலியியல்ரீதியாக முறைதவறி நடந்துள்ளார் எனில், இவற்றுக்கென பிரத்யேக கலந்தாய்வு மையங்கள் உங்களுக்கு உள்ளன. தயவு செய்து தொடர்புகொள்ளவும்

bif Frauenberatung (ஒரு துணைவரால் உடல்ரீதியாக துன்புறுத்தப்படுதல்)

Nottelefon Zürich/Winterthur (பாலியியல் வன்முறை)

Castagna (குழந்தைப் பருவத்தில் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல்)

ஸுரிச் மண்டலத்திற்கான பாதிக்கப்பட்டோர் ஆதரவுத் துறையால் வெளியிடப்பட்டுள்ள தகவல் தாளில் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு குறித்து கூடுதல் தகவல்கள் நீங்கள் கண்டறியலாம்:

http://www.opferhilfe.zh.ch/internet/justiz_inneres/opferhilfe/de/service/international.html

விரிவான தகவல்களை நீங்கள் ஜெர்மன் மொழியில் இங்கு கண்டறியலாம்:

வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள்

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள்

பாலியல்ரீதியான வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள்

சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்

நாங்கள் இலவசமான மற்றும் இரகசியமான **கலந்தாய்வு சேவையை** வழங்குகின்றோம்

044 299 40 50
opferberatung@obzh.ch